# சிறுவர் அமுதம்

19.07.98

எண்ணம் 9

கிண்ணம் 7



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

அன்புச் சிறுவர் சிறுமியரே!

இந்தியப் பிரதமரான இந்திராகாந்தியின் அகால மரணத்தின்போது இந்தியாவே அழுதது. தலைநகரான டெல்கியில் கலவரம் உண்டானது. ஆனால் தொலைக்காட்சியிலோ, பத்திரிகையிலோ ராஜீவ்காந்தி அழுததாக யாரும் அறிந்ததில்லை.

ராஜீவ்காந்தி சிறுவனாக இருந்தபோது அன்னையான இந்திராகாந்தியோடு மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்றிருந்தார். அங்கு எதையோ கண்டு சிறுவன் ராஜீவ் அழுதாராம். அப்போது இந்திராகாந்தி "நாங்கள் பெருமை பெற்ற பரம்பரையினர். நம் பரம்பரையில் பிறந்தவர்கள் அழுவதில்லை." என்று ஆறுதல் படுத்தினாராம்.

அன்றிலிருந்து ராஜீவ்காந்தி எவ்விடத்திலுமே அழுவதில்லை. தம் அன்னையின் இழப்பில் கூட அவர் அழவில்லை. குடும்பத்தைப் பற்றிச் சிறுவயதிலேயே தோன்றிய பெருமித உணர்வு, அதனால் ஏற்பட்ட ஆத்மபலம் அது.

இதேபோல அமெரிக்க ஜெனாதிபதியான ஜோன் கென்னடி துப்பாக்கிச் சூட்டில் மரணமானார். காரில் கணவனும் மனைவியும் அருகருகே அமர்ந்திருந்த வேளையில் கென்னடியின் மூளையைச் சிதறச் செய்தது துப்பாக்கிக்குண்டு. தன் மனைவியான ஜாக்குலின் மடியிலேயே மரணமடைந்தார் கென்னடி. உடலை வைத்தியசாலைக்கு எடுத்துச்

சென்றார்கள். அந்த வேளையில், தன் கைகளில் வைத்திருந்த பொருளை ஜாக்குலின் வைத்தியரிடம் ஒப்படைத்தார். அது எதுவென்று நினைக்கிறீர்கள்?. கென்னடியின் மூளையின் ஒரு பகுதி அது. அமெரிக்காவின் முதல் பெண்மணியாக அவ்வேளையில் இருந்த ஜாக்குலின் நிலை தளர்ந்து விடப் போகின்றாரே என்று நினைத்து அவரை அவ் விடத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்தார்கள்.

அவ்வேளையில் தளர்ந்து விடவில்லை. கண்ணீர் விட்டுக் கதறவில்லை. மனத்தைரியத்துடன் நின்றார். இது அவரது ஆன்மபலத்தையே காட்டுகின்றது. நமக்கும் நாம் கௌரவம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர்கள் என்னும் எண்ணம் வேண்டும். நாம் கௌரவமாகவே வாழ்ந்து விட வேண்டும் என்னும் எண்ணம் வேண்டும். அது நம்மைக் கௌரவமானவர்களாகவே ஆக்கும்.

-ஆசிரியை-

கடவுள் மனிதனாக வாழ்ந்தால் அது புராணம். மனிதன் கடவுளாக வாழ்ந்தால் அது சரித்திரம்.

–யாரோ–

# பொற்காசும் பூசணிக்காயும்.

(கொரியநாட்டு நாடோடிக்கதை)

கொரியநாட்டின் கிராமம் ஒன்றில், மூன்று சகோதரர்கள் வசித்து வந்தனர். அவர்களில் மூத்தவன் டோங்டோங்கி. அடுத்தவன் சால்சாரி. கடைசிப் பையன் இல்சுங். மூத்தவர்கள் இருவரும் சோம்பேறிகள். இளையவன் இல்சுங் மிகவும் அழகானவன். சகோதரர்கள் இருவரையும் போல இல்லாமல் சுறுசுறுப்பானவன். சிறந்த உழைப்பாளி. அவனுடைய தந்தை உயிரோடு இருந்தவரை அவனிடம் மிகவும் பிரியம் உள்ளவராக இருந்தார்.

அவர் இப்போது இறந்து விட்டார். இல்சுங்கை வீட்டில் இருந்து அழக்கூடச் சகோதரர்கள் விடவில்லை. அவன் கெஞ்சக்கெஞ்ச அவனை வீட்டை விட்டே துரத்தி விட்டனர். அயலவர் அவனைத் தங்கள் வீட்டுக்குச் அழைத்துச் சென்று உணவு கொடுத்தனர். எத்தனை நாட்கள் தான் அயலவர்கள் உதவ முடியும்?. இல்சுங் அவர்களிடம் விடை



பெற்றுக் கொண்டு, காட்டுக்குச் சென்றான்.

அங்கு மரங்கள், ஓலைகள் கொண்டு வந்து தனக்கென ஒரு குடிசையை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். பின் தன் உழைப்பாலும், ஊதியத்தாலும் சிறு வீடொன்றைக் கட்டினான். சுறுசுறுப்பான இல்சுங் காட்டிலுள்ள காய் கனிகள், மிருகத்தின் இறைச்சி போன்றவைகளைச் சந்தையில் விற்பான். அவற்றைக் கொண்டு தானும் சமைத்து உண்பான். ஆனாலும் தனித்து வாழ்வது அவனுக்கு வேதனையாக இருந்தது.

அவனுடைய வீட்டில் பனிக்கால அடுப்பு இருந்தது. அதில் உணவு சமைப்பது மட்டுமன்றி, வீட்டை உ"ணமாக்கியும் கொள்ளலாம். "இச்சிறு வீட்டில் பனிக்காலத்திற்கு என்ன செய்யப் போகின்றேன்." என்று தனக்குள்ளேயே யோசித்துக் கவலைப்படுவான். ஒரு நாள் காட்டிற்குச் சென்றவேளை அவனுக்கு காய் கனிகள் எதுவுமே கிடைக்கவில்லை. வயிற்றுப் பசியோடு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

வழியில் சிறிய பறவை ஒன்று இருந்தது. அதை மெல்லப் பிடித்தான். அப்போது அதன் உடம்பில் சிறு காயம் இருப்பதையும், அதனாலேயே அது பறக்க முடியாமல் இருந்தது என்பதையும் அறிந்து கொண்டான். அந்தச் சிறுகாயத்திற்கு பச்சிலை வைத்துக் கட்டினான். வீட்டிற்குக் கொண்டு வந்தான். சொகுசாய் அதனைப் பராபரித்தான். சிலநாட்களில் பறவை குணமடைந்தது.

அவனுக்குச் சினேகிதனாய் அது இருந்தது. இல்சுங்கும் அதன் மேல் பிரியமாக இருந்தான்.

ஒருநாள் அவன் காட்டிற்குச் சென்று திரும்பியபோது பறவையைக் காணவில்லை. அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. அடுத்த நாள் அவன் கண் விழித்தபோது பறவை யன்னல் அருகில் இருந்தது. அதன் அலகில் பூசணி விதை ஒன்றிருந்தது. அது விதையை இல்சுங்கின் கையில் கொடுத்து, "இதை மண்ணுக்குள் விதைத்து விடு. இதனால் உனக்கு நன்மை உண்டு." என்று சொல்லி விட்டுப் பறந்தது.

அவனும் அந்த விதையை மண்ணில் விதைத்தான். அது முளைக்கத் தொடங்கியது. பெரிதாகி வளர்ந்தது. நிறையக் காய்கள் காய்த்தது. சந்தைக்குச் செல்வதற்காகப் பூசணிக்காய்களைப் பறித்தான். அதைக் கூறுகளாக்கினான். என்ன ஆச்சரியம்! உள்ளேயிருந்து பொற்காசுகள் கீழே சிந்தின. அவன் இன்னொரு காயைப் பறித்தான். அதை வெட்டியபோது அதற்குள்ளும் பொற்காசுகள் இருப்பதைக் கண்டான். அவனுக்கு ஆச்சரியமும் ஆனந்தமுமாக இருந்தது.

சந்தோர்த்தை அவன் யாரிடம் பங்கு போட முடியும்?. இரு பூசணிக்காய்களை எடுத்துக் கொண்டு அண்ணன்மாரிடம் சென்றான். அவர்களிடம் நடந்ததைக் கூறினான். பின் அவர்களின் முன்னாலேயே ஒரு காயை வெட்டினான். பொற்காசுகளை அள்ளிக் கொண்டு, அப்பொழுதும் அண்ணன்மார் இருவரும் அவனை

விரட்டினர். பின் தாங்களும் அவ்வாறே பணம் புரட்ட எண்ணினர்.

தன் இளையவனாகிய சால்சாரியை காட்டுக்கு அனுப்பினான் டோங்டோங்கி. காயப்பட்ட சிறகு முறிந்த பறவையை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்து வர வேண்டும் என்று சால்சாரியிடம் சொன்னான் டோங்டோங்கி. சால்சாரி எங்கு தேடியும் பறவை கிடைக்கவில்லை. அவன் ஒரு பறவையைப் பிடித்தான். அதன் சிறகை ஒடித்துக் காயமுண்டாக்கினான். பின் அதனைக் கொண்டு வீட்டுக்கு நடந்தான்.

சகோதரர்கள் இருவரும் அந்தப் பறவையின் காயத்திற்கு மருந்து வைத்துக் கட்டினார்கள். காயம் ஆறும்வரையாவது பொறுத்திருக்க மனமில்லாமல் அச்சிறு பறவையை ஏசினார்கள். சில நாட்களில் பறவை குணமடைந்தது. பின் வானில் சிறகடித்துப் பறந்தது. அப்பொழுதே தாங்கள் பணக்காரர்களாகி விட்டதைப் போல இருவருமே சந்தோஷப் பட்டார்கள். இல்சுங்கிடம் வந்த பறவை போலவே இப்பறவையும் அடுத்தநாள் விதை கொண்டு வந்து கொடுத்தது.

அந்த விதையைச் சகோதரர்கள் இருவரும் மண்ணில் நட்டார்கள். நீரூற்றி வளர்த்தார்கள். விதை முளைத்து வளர்ந்தது. பெரிதாகி நிறையக் காய்கள் காய்த்தது. காய்கள் பெரிதானதும் பொற்காசுகளை அள்ளுவதற்காகப் சாக்குப்பைகளையும் தயாராக்கிக் கொண்டு, பூசணிக்காயொன்றை வெட்டினார்கள். உள்ளே இருந்து

பாம்பு வெளியேறியது. பயந்து விலகி ஓடினார்கள். பின் அடுத்தகாயை வெட்டினார்கள். அதற்குள்ளும் சீறிக் கொண்டு பாம்பு வெளியேறியது.

பின் பூசணிக்கொடியில் உள்ள எல்லாக் காய்களையும் வெட்டினார்கள். பாம்புகள் மட்டுமா? தவளை, சிலந்தி, தேள், பல்லி இவ்வாறு பல வெளியேறின. டோங்டோங்கியும், சால்சாரியும் அலறிக் கொண்டு வீட்டை விட்டு ஓடினார்கள். அன்று முதல் அவர்களை யாரும் காணவேயில்லை. இல்சுங்கும் தமயன்மாரைத் தேடிப் பார்த்துக் களைத்து விட்டான். நீங்கள் யாராவது அவர்களைக் கண்டீர்களா?.

## ஒழுங்கு

நாடகம் தொடங்குவதற்கு சில நிமிடங்களே இருந்தது. வாசலில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. வரிசைக் கிரமமாக ஒழுங்காக நிற்கும் படி மண்டபப் பொறுப்பாளர் ஒலிபெருக்கி மூலம் சொல்லிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் உள்ளவர்களை, மண்டபத்தின் வாசலில் டிக்கற் கொடுத்துக் கொண்டிருந்த தணிகாசலம் எழுந்து வெளியே வந்தான்.

எல்லோரையும் வரிசையாக நிற்க வைக்க முயற்சி எடுத்துக் கொண்டிருந்தான். வரிசையை விட்டு விலகிக் கொண்டு சிலர் சண்டையிட்டுக் கொண்டு நிற்பதைப் பார்த்ததும், "ஆட்டு மந்தைகளைப் போல ஏன் நடந்து

கொள்ளுகிறீர்கள்." என்று பேசிக் கொண்டே சண்டையிட்டுக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தான். "எல்லோருக்குமே டிக்கற் கொடுக்கலாம். எல்லோரும் ஏன் முண்டியடித்துக் கொள்கிறீர்கள். நீங்கள் மனிதர்கள் தானே? சொல்வது விளங்கவில்லையா? எறும்புக் கூட்டத்தைப் பார்க்கவில்லை நீங்கள்!" என்று கடிந்து கொண்டான்.

பிரச்சனைக்குக் காரணமாக இருந்த ஆனந்தன் "எறும்பைப் பற்றி நானும் படித்திருக்கிறேன்." என்றான். தணிகாசலம் எரிச்சலோடு, "என்ன படித்தீர்கள்?" என்று கேட்டான். ஆனந்தனும் சலிக்காமல் பதில் சொன்னான், "உணவு இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கச் சில எறும்புகள் புறப்படும். போகும் பாதையில் "பெரோமன்" என்னும் இரசாயனப் பொருளை வெளியேற்றியவாறே செல்லும். பின் அந்த மணத்தைக் கொண்டே, எறும்புகள் திரும்பி வந்து விடுகின்றன. மற்ற எறும்புகள் போய் வருவதற்கு அந்த மணம் பாதையாக அமைந்து விடுகின்றது.




எறும்புகள் குறுக்குப் பாதைகளை விரும்புவதில்லை. நேரான தமக்குச் சாதகமான பாதையையே விரும்பும். அதனாலே தான் எறும்பகள் வரிசையாகச் செல்கின்றன."

சூட்டிப் பிரசங்கமே செய்தான் ஆனந்தன். தணிகாசலம் அவனைப் பார்த்து, "இவ்வளவு தெரிந்து வைத்திருக்கும் உனக்கு நாகரீகமாக நடந்து கொள்ளத் தெரியவில்லையே! ஏழு எட்டுத் தடவையாக நீ வரிசையைக் குழப்பிக் கொண்டு ........... . இப்படியே குழப்பம் செய்தால் நாடகம் எப்படிப் பார்ப்பது? எப்போது பார்ப்பது?" என்றான்.

"நானும் அதைத் தானே சொல்லிக் கொண்டிருக்கின்றேன். கேட்பவர்களைத் தான் காணவில்லை." என்றான் ஆனந்தன். தணிகாசலத்துக்கு ஆனந்தன் தன்னைக் கேலி செய்வது போல இருந்தது. ஆனந்தனை முறைத்துக் கொண்டே "என்ன கேலியா செய்கிறாய்? நீயே சரியான வரிசையில் வராமல்" என்ற தணிகாசலத்தைப் பார்த்து ஆனந்தன், "நான் உள்ளே நுழையாவிட்டால் எதுவுமே நடக்காது. நாடகத்தில் நடிக்கும் நடிகன் நான்." என்றான்.

தணிகாசலத்துக்குத் தலை சுற்றியது.

மற்றவர்களைப் பற்றிப் பழி சொல்லாதீர்கள். உங்களிடம் இருக்கும் கெட்டசெயல்களை, மற்றவர்கள் பழி சொல்வார்கள். இதை அறிந்து கொள்ளுங்கள்.

— திருவள்ளுவர் —

## வினாவிடைப்போட்டி

1. பர்மாவின் தற்போதைய பெயர் என்ன?

அம்மி, ஆயாசம், நன்றி, மஞ்சள், பார்வை.

2. உலகில் இரண்டாவது பெரியநாடு எது?

கண்தானம், ஈனம், ஆடாதோடை.

3. போத்துக்கேயர் இலங்கைக்கு வந்த வேளையில் கொழும்புவின் பழைய பெயர் எது?

அலங்கோலம், பட்டயம், நாரை.

4. இஸ்ரேல் நாட்டு நாணயத்தின் பெயர என்ன?

ஷெல்லி, பக்கம், முகமூடி, இன்னல்.

5.வளைகுடா நாடுகளில் கூடுதல் எண்ணெய் வளம் கொண்ட நாடு எது?

பாசம், கரவு, பந்தி, அச்சாரம், கைரேகை, தும்பி, பேரியாழ்.

முடிவு திகதி: 5.10.98

# இரத்தம் ஒரே நிறம்

அடுத்த வீட்டு அமீருமே
அழகாய்ப் பார்த்துச் சிரிக்கிறான்.
அவனைப் பார்த்துச் சிரித்தாலோ,
அம்மா என்னை முறைக்கிறாள்!

வகுப்பு வேளை தன்னிலே— வருணன்
வருத்தப்பட்டான் மிலீேடம்
மெல்லச் சிரித்த மிஷேலுமே,
மெதுவாய் அவனை அணைத்தனன்!

"இரத்தம் ஒரே நிறமென்று— பப்பா
சொன்னார் என்னிடம்"
மிஷேலும் சொன்னான். வருணனும்
மெதுவாய்த் தலையை ஆட்டினான்.

பள்ளிக்கூடம் விட்டதும்
பாலர் தெருவில் இறங்கினர்.
வாழைப்பழத் தோலிலே,
வழுக்கி விழுந்தான் வருணனும்!

விழுந்த இடத்தில் கல் ஒன்றில்
தலையும் மோதி விட்டதால்,
காயம் வந்து விட்டது —தலையில்
கனக்க இரத்தம் வழிந்தது.

காயம் பட்ட தலையிலே
 கனக்க இரத்தம் வழிந்ததால்,
வருணன் மயக்கமாயினான் — மிலேஸ்
 வகை தெரியாது திகைத்தவன்

வீடு அருகில் இருந்ததால் — பெற்றோரை
 விரைவாய் அழைத்து வந்தனன்!
வருணன் நிலையைக் கண்டதும் — பெற்றோர்
 வைத்தியசாலையிலே சேர்த்தனர்!

அமீரின் தந்தை வைத்தியர் —
 அவர்தான் செய்தார் சிகிச்சையே!
இரத்தம் தேவையானதால்,
 கொடுத்தார் மிலேஸின் தந்தையே!

வருணன் பெற்றோர் வந்தனர் — வந்து
 வி'யம் யாவும் அறிந்தனர்.
நன்றி மிகவும் சொல்லினார் — பின்
 நண்பராகி விட்டனர்.

வருத்தம் மாறி விட்டதும்,
 வருணன் பள்ளிக்கூடம் வந்தனன்.
பாடங்களைப் படித்த பாலர் — பின்
 பாடி விளையாடினர்!

பள்ளிக்கூடம் விட்டதும் — பாலர்
ஒன்று கூடினர் — அருகில் நின்ற
அமீரையும், அன்புத் தோழன் மிலேனியும்
வருணன் வாரி அணைத்தனன்!

வாரி அணைத்த வேளையே — வருணன்,
வாய் உரத்துக் கூறினான்
"இரத்தம் ஒரே நிறமெடா!
இறைவன் ஒருவன் தானெடா!

சண்டை வேண்டாம் இனியெடா!
சமத்துவம் தான் உயர்வெடா!"
வாரியணைத்த நண்பரும் — அதை
வாய் உரத்துச் சொல்லினர்.

— புலவர் பூங்கோதை —



## ***வினாவிடைப்போட்டி*** முடிவு:

1.இந்தியாவில் குகைச் சிற்பத்திற்குப் பெயர் பெற்றது?
அஜந்தா.

2.வெடி மருந்தை உலகத்துக்கு அறிமுகம் செய்தவர்கள்?
சீனர்கள்

3.இரண்டாம் உலகப்போரில் நாசமான இரண்டு நகரங்கள்.
ஹிரோஷிமா, நாகசாகி.

4.பௌத்த மதத்தை அயல் நாடுகளில் பரப்பிய சக்கரவர்த்தி
அசோகன்

5.சுவாமி விவெகானந் தரிடம் சீடராகச் சேர்ந்த வெளிநாட்டுப் பெண்.
நிவேதிதா.

எழுதியவர்கள்:

1.ஷந்தியா ரவீந்திரராஜா Solingen
2.ஜெயசாந் மனோரஞ்சிதராஜா Münster
3.கிரிசாந் மனோரஞ்சிதராஜா Münster
4.ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
5.ஜெயமாலா இரத்தினசபாபதி Eschelbronn
6.மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
7.அபிராமி பரமேஸ்வரன் Denmark
8.தர்சன் சரவணபவன் Sölingen
9.கௌரிசங்கர் சரவணபவன் Solingen
10.முகுந்தன் மகேந்திரன் Berg.Gladbach

இம்முறைக்கான பரிசு ஷந்தியா ரவீந்திரராஜாவுக்குக் கிடைக்கிறது.

# நோய் தீர்க்கும் மருந்து

மேலை நாட்டினருக்கு மட்டுமல்ல, எங்கள் நாடுகளிலும் கோயிலில் வைத்தியம் செய்யும்முறை இருந்திருக்கின்றது. இதனால்தான் வைத்தியநாதன், விக்னேஸ்வரன் என்று கடவுளை வணங்கியிருக்கின்றோம். இன்றும் வணங்கி வருகின்றோம். அது போல கிரேக்கர்கள் பழைய காலத்தில் ஆக்ளிபியஸ் (Asklipios) என்னும் கடவுளை நோய்களைத் தீர்க்கும் கடவுளாக வணங்கினார்கள். இந்தக் கடவுளுக்குப் பெரிய கோயிலையே எபிடாரஸ் (Epidaurus) என்னும் இடத்தில் கட்டியிருந்தார்கள்.

இவ்விடத்தில் பெரிய மருத்துவமனை இருந்தது. நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றனர். தற்காலத்தில் காணும் வைத்தியசாலைகளைப் போல பலவசதிகளைக் கொண்டிருந்தது. மின்சாரம், கணணி இருக்காத அந்தக் காலத்தில் கிரேக்கத்தில் பெரிய வைத்தியசாலைகள் பல இடங்களிலும் இருந்தன. கோயில்குருக்களே வைத்தியராக இருந்தார். பொதுவாகத் தந்தையிடம் இருந்து மகனே வைத்தியராக இருந்தார்.

வைத்தியத்துக்காகச் செல்லும் நோயாளிகள் ஒரு மிருகத்தைப் பலி கொடுக்க வேண்டும்.



அந்த மிருகத்தோலிலேயே வெளிச்சம் ஏதுமில்லாமல் ஓரிரவு தனிமையிலே படுத்துறங்க வேண்டும். அந்த வேளையில் மஞ்சள் நிறமான பாம்புகள் அவ்விடத்துக்கு வரும். அவைகளை அணைத்துக் கொண்டு நோயாளி அவற் றிற்கு உணவு கொடுக்க வேண் டும். (ஆக்ளிபியஸ் தெய்வத்தின் அடையாளம் அது தான். அவரது கைகளில் பிரம்பும் அதில் சுற்றியிருக்கும் பாம்பும் அவரது சின்னங்கள். இன்றும் வைத்தியத்துக்குரிய குறியீடாக இச்சின்னமே இருக்கின்றது.) அது நல்ல அறிகுறியாகக் கருதப்பட்டது. அதை விடவும் நோயாளி கனவுகளும் முக்கியமாகக் கருதப்பட்டது.

மருத்துவம் வளர்ச்சியடையாத அந்தக் காலத்தில் மூடத் தனமான மந்திண தந்திரங்கள் இருந்தபோதும் வேறுவேறு நோயாளிகளுடன் பழகும்போது உண்மையான சிந்தனைகளையும் மருத்துவர்களிடையே உண்டாக்கியது.

-தொடரும்-

## மரமும் மனிதர்களும்



அடர்ந்து செறிந்து பெரிய மரங்களைக் கொண்டிருந்தது அந்தக் காடு. ஒரு நாள் சில மனிதர்கள் அந்தக் காட்டிற்குள் கோடரிகளோடும், வேறு ஆயுதங்களோடும் வந்தார்கள். அங்கும்இங்கும் திரிந்து மரங்களை வெட்டினார்கள். அவர்கள் வெட்டுவதைப் பார்த்துக் கொண்டு வேறு மரத்தில் இரண்டு புறாக்கள் இருந்தன. அவைகளில் ஒன்று ஆண். மற்றது பெண்.

பெண்புறா ஆண்புறாவைப் பார்த்துக் கேட்டது, "இந்த மரங்களை ஏன் இவ்வளவு அவசரமாக வெட்டுகின்றார்கள்? வெட்டிய மரங்களை என்ன செய்யப் போகிறார்கள்?"

அதற்கு ஆண்புறா, "மரங்களின் பயனை நம்மை விடவும் மனிதர்களுக்குத் தெரியும். நாங்கள்

வசிப்பிடமாகவும், உல்லாசமாக இருப்பதற்கும் பயன் படுத்துகின்றோம். மனிதர்கள் கட்டில், அலுமாரி, கதவு, யன்னல் இவ்வாறு பலவற்றைச் செய்வார்களே! சமையலுக்காக விறகாக்கிக் கொள்வார்கள். இன்னும் எவ்வளவோ! தங்களின் சுகத்துக்காக மனிதர்கள் எதையும் செய்வார்கள்." என்று சொல்லிச் சிரித்துக் கொண்டது.


"சுகவாழ்க்கைக்காக இவற்றைச் செய்கிறான். இறந்த பின் மனிதன் என்ன செய்யப் போகின்றான்?. இவற்றையெல்லாம் கொண்டு செல்லப் போகின்றானா?" என்று சிறிது சலிப்புடன் கேட்டது பெண்புறா.

"உனக்குத் தெரியாதா? இறப்புக்கும் அவர்கள் மரத்தை விடுவதில்லை. சவப்பெட்டி செய்வார்கள். உடல்களை எரிக்க விறகாகப் பயன் படுத்துவார்கள்." என்றது ஆண்புறா.

"சரி, இவ்வளவுக்கு மரத்தைப் பயன் படுத்தும் மனிதனுக்கு ஏன் தன்னை ஒரு நல்ல மனிதனாகத் தயார்ப் படுத்தத் தெரியவில்லை?" என்றது பெண்புறா.

இதற்கான பதிலை மனிதனிடம் தான் கேட்க வேண்டும். அவனுக்கும் இதற்கான பதில் தெரிந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றது ஆண்புறா.

# வீணர்கள்



கிராமத்தில் கமம் செய்து வாழ்ந்தது காந்தனின் குடும்பம். காந்தனின் அம்மா ஏற்கெனவே இறந்து விட்டிருந்தார். சமீபத்தில் தந்தையும் திடீரென்று மாரடைப்பால் காலமாகி விட்டார். தந்தை இருக்கும்வரை கமம் செய்து வந்த காந்தனுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைத்தது. தன் குடும்பத்துடன் வேறு ஊருக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. கமம் செய்த நிலத்தை விற்று விட எண்ணினான்.

அவ்வூரில் உள்ள அவன் உறவினர்கள் விடவில்லை. "நிலத்தை விற்காதே. உனக்கிருக்கும் நிலத்துண்டு அது ஒன்று தான். அதை யாரும் அள்ளிக் கொண்டு போய்விட மாட்டார்கள். வெறும் நிலமாகவே இருக்கட்டும். நாங்கள் இல்லையா? நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்." என்றார்கள்.

காந்தனாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. நிலத்தை அவர்களிடமே ஒப்படைத்து விட்டு வேலைக்காக வேறு ஊருக்குச் சென்று விட்டான்.

பத்து வருடங்கள் கழிந்தன. விட்டு வந்த நிலத்தை ஒருதரம் பார்த்து விட்டு வருவோமே! என்று நினைத்த காந்தன் தன் ஊருக்கு வந்தான். அங்கு வந்த அவன் தன் நிலத்தையே காணாமல் திகைப்புடன் நின்றான். அப்போது அந்த வழியே பெரியவர் ஒருவர் வந்தார். அவனைக் கண்டதும், நின்று உற்று நோக்கினார். பின் "நீ மருதப்பிள்ளையின் மகன் காந்தன் தானே!" என்றார்.

காந்தனும் "ஆம், இங்கிருந்த என் நிலத்தைக் காணவில்லையே! நிலத்தை விற்று விடுவோம் என்று வந்தால் நிலம் ஒரே மேடாகவும், காடாக முள்ளும் கல்லுமாக இருக்கிறதே! என் நிலத்தையே காணவில்லையே.!" என்றான். பெரியவர் சிரித்தார். "காடாகி இருக்கும் நிலம் தான் உன்னுடையது தம்பி. "தன் கைப்பொருளும் தன் ஆயுதமும் பிறர் கையிற் கொடுக்கும் பேதையும் பதரே" என்ற முதுமொழி உனக்குத் தெரியாதா?" என்றார்.

தன் உறவினர்கள் தனக்குச் செய்த துரோகத்தை எண்ணிக் கொண்டு மௌனமாகக் காந்தன் நின்றான். அப்போது பெரியவர் "நீ இந்த ஊரை விட்டுப் புறப்படும்போதே நிலத்தை விற்றிருக்க வேண்டும். அப்பொழுது பெறுமதியாக இருந்தது. இனி இந்த நிலத்தை யார் வாங்குவார்கள். யாரேனும் வாங்கினாலும் குறைந்த விலைக்கே வாங்குவார்கள். வீணர்களின் பேச்சை நம்பி மோசம் போய் விட்டாயே!" என்றார். அவர் சொன்னது உண்மைதான் என்பதை அறிந்த காந்தன் தான் வந்த வழியில் திரும்பி நடந்தான்.

## காந்தியும் இறைச்சியும்



மகாத்மாகாந்தி சிறுவனாக இருந்தபோது நடந்த சம்பவம் இது. காந்தியின் குடும்பத்தினர் மாமிசம் சாப்பிடுவதில்லை. காந்திக்கு பள்ளித்தோழன் ஒருவன் இருந்தான். அவன் நன்றாகப் இறைச்சி சாப்பிடுவான். காந்தியோ மெலிந்த நோஞ்சான் உடம்பைக் கொண்டவர். நண்பனோ சற்றுப் பருமனாக இருந்தான். காந்திக்கு தான் மெலிந்த உடம்பாக இருப்பது கவலையாக இருந்தது.

நண்பன் தான் இறைச்சி உண்பதாலேயே அழகாக இருப்பதாகக் கூறினான். தானும் பெருத்து அழகாகத் தோற்றமளிக்க வேண்டுமென்று காந்தி ஆசைப்பட்டார்.


இதனால் நண்பரோடு சேர்ந்து இறைச்சி சாப்பிட்டார். அன்றிரவு உறக்கத்தில் ஆடு வயிற்றுக்குள் இருந்து கத்துவதைப் போலக் கனவு கண்டார். அன்றிலிருந்து இறைச்சியைத் தொடுவதையே விட்டு விட்டார்.

பின்பு முதுமையில் நோய் வந்த காலத்தில் கூட மகாத்மாகாந்தி மாமிசத்தைத் தொட்டதில்லை. காந்தி ஆச்சிரமத்தில் தங்கியிருந்த வேளையில், முஸ்லீம் பெரியவரான கான்அப்துல்கான் காந்தியைக் காண வந்திருந்தார். அவரோடு பேசிக் கொண்டிருந்த காந்தி அருகில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஊழியரை அழைத்தார்.

அவனிடம் "எங்கேயாவது இறைச்சி கிடைத்தால் வாங்கி வா." என்றார் காந்தி. ஆச்சிரமத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் திகைத்து நின்றனர். அகிம்சையைப் போதிக்கும், அகிம்சை வழியில் வாழும் மகாத்மாவா இறைச்சி வாங்கி வரச் சொல்வது! திகைக்காமல் என்ன செய்வது?

அப்போது மகாத்மா அவர்களைப் பார்த்து, "நான் அவரை மதிக்கிறேன். அவருடைய பழக்க வழக்கங்களை மதிக்கிறேன். எந்த உணவை அவர் விரும்புகிறாரோ அதை அவருக்குக் கொடுப்பது எனது கடமை. அது தவறல்லவே!" என்றார்.

சார்லி சப்ளின்



Charlie vor dem Aufschlag

சார்லியின் நண்பரான டி.எம்.ரெண்ட் என்பவர் மூலம் சார்லிக்கு ஜோன்பேரி அறிமுகமானாள். அவளை ஏனோ சார்லிக்குப் பார்த்தவுடனேயே பிடித்துப் போனது. அவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். ஜோன்பேரியின் அழகில் சார்லி மயங்கிய வேளையிலும், தன் வேலைகளை விட்டுவிட்டு நேரத்தை வீணடிக்காமல் பார்த்துக் கொண்டார்.

ஆனாலும் சிலவேளைகளில் ஜோன் அவரைத் தேடி வருவாள். சார்லி கோபத்துடன் கடிந்து கொண்டாலும், தன் புன்னகையால் அவரைச் சமாளித்து விடுவாள். ஒருநாள் நாடகமொன்றைப் படமாக்கும் யோசனையில் சார்லி ஆழ்ந்திருந்தார். ஜோன் அந்த நேரத்தில் வந்தாள். சார்லிக்கு அது பிடிக்கவில்லை. ஆனாலும் தன்கையில் இருந்த படத்திற்கான வசனங்களை அவளைக் கொண்டு படிப்பித்தார்.

அவளிடம் அவ்வளவு திறமை இருக்கும் என்று அவர் நினைக்கவில்லை. அவளையே அந்தப் படத்தின் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்தார். ஒரு கிழமைக்கு 250 டொலர் சம்பளத்தில் ஜோன்பேரி நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டாள். திரைக்கதை எழுதும் வேலையில் சார்லி ஈடுபட்டார். ஒருநாள் இரவு நன்றாகக் குடித்து விட்டு ஜோன் சார்லியின் வீட்டுக்கு வந்து விட்டாள். இன்னொரு நாள் குடிபோதையில் காரோட்டி வந்து சார்லியின் வீட்டு மதிலின் மேல் மோதி விட்டாள். குடித்துவிட்டுக் கார் ஓட்டிய குற்றத்துக்காகப் பிடிபட்டால் தன் கௌரவம் பறிபோய் விடுமே என்று சார்லி அச்சம் கொண்டார்.

இதனால் அவளுடன் தொலைபேசியில் பேசுவதையும், அவளைத் தனிப்பட்ட முறையில் சந்திப்பதையும் தவிர்த்துக் கொண்டார். ஜோன்பேரி நடிப்புப்பள்ளிக்குக் கூடச் சரியான நேரத்துக்கு வருவதில்லை என்னும் குற்றச்சாட்டும் அவருக்குக் கிடைத்தது. இதனால்

ஜோனிடம் மிகக்கோபம் கொண்டார். அவளிடம் கடுமையாக நடந்து கொண்டார். தன்னிடம் கடுமையாக நடந்து கொண்டதற்காக ஐயாயிரம் டொலர் பணம் தந்தால் தான் ஒப்பந்தத்தைக் கிழித்து விட்டு வெளியேறி விடுவதாக ஜோன்பேரி கூறினாள். சார்லியும் பணத்தைக் கொடுத்து அவளை அனுப்பி விட்டார்.

மீண்டும் தன் பணியைத் தொடர்ந்த சார்லிக்கு அதை இடைநிறுத்தி வைக்கும் நிலையேற்பட்டது. ஒருசமயம் நடிகரும், இயக்குனருமான ஆர்தன் வெல்ஸ் தன்னிடம் நல்ல கதைகள் இருப்பதாகச் சார்லியிடம் கூறினார். பிரான்சில் நடந்த உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட அந்தக் கதைகள் சார்லிக்குப் பிடித்திருந்தது. ஆர்தன் வேல்ஸ் சார்லியிடம் இருந்து ஐயாயிரம் டொலர் அன்பளிப்பாகப் பெற்றார். இதேவேளையில் திரைப்பட த்துறையைச் சேர்ந்த மிஸ்மினா வாலெஸ் என்னும் பெண் ஜோன்பேரியின் இடத்திற்குக் கதாநாயகி கிடைத்திருப்பதாக அறிவித்தாள்.


— தொடரும் —

□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□

வறுமையை பெருமையாக நினைக்காதீர்கள். அதைப் பற்றி வெட்கப்படவும் வேண்டாம். எவ்வளவு விரைவில் அதைத் நீக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் வறுமையை நீக்கி விடுங்கள்.

— டேவிட் ஜே—

## பச்சை ஓணான்



பச்சை ஓணானின் பாதம் மனிதனுடைய கையளவு போலப் பெரிதாக இருக்கும். நாக்கு நீளமாக இருக்கும். இதில் ஒட்டும் தன்மை உண்டு. சிறு பூச்சிகள் இந்த ஓணானின் நாக்கில் ஒட்டிக் கொள்ளும். ஓணான் உடனடியாக உணவை உள்ளே எடுத்துக் கொள்ளும். ஓணான் பார்க்கும்போது கண்கள் வேறுவேறு திசைகளைப் பார்த்துக் கொள்ளும். ஓணான் மரத்தின் நிறத்திற்கேற்ப தனது உடலின் நிறத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டது.

கோபம் வரும்போது இதனுடைய நிறம் கடும்பச்சையாக மாறி விடும். இது மட்டுமல்ல! ஓணான் தனது எதிரியுடன் சண்டை பிடித்துத் தோல்வி அடைந்தால் தன் தலையைத் தொங்கப் போட்டு விடும். ஓணானில் கிட்டத்தட்ட எண்பத்தைந்து இனங்கள் உண்டு. சில ஓணானுக்கு மூன்று கொம்புகள் உண்டு. ஓணான் குஞ்சுகள் 5செ.மீ நீளம் உடையவை. ஆண் குஞ்சுக்கு சிறிய மூனறு கொம்புகளும், பெண் குஞ்சுக்கு சிறிய ஒரு கொம்பு உண்டு.

சில ஓணான்கள் குரங்குகளைப் போல மரக் கிளைகளில் தமது வாலினால் சுற்றிக் கொண்டு ஊஞ்சல் ஆடும். இவற்றில் மூர்க்கத்தனமான ஓணான் மடகாஸ்கார் என்னும் தீவில் இருக்கிறது.

படித்துச் சுவைத்ததை எழுதி அனுப்பியவர்ஹ
செல்வி. சிந்துஜா செல்வராசா.

அதட்டாமல் பாடம் சொல்லித் தரும் ஒரே ஆசிரியர் புத்தகம் தான்.

— ரஸ்கின் —

உணவைப் பற்றித் தான் அறிந்ததை எழுதி அனுப்பி இருக்கிறார் தர்சன் சரவணபவன்

## உணவு




உணவு சக்தியைத் தருகிறது.
உணவு உடல் உறுப்புகளைச் சீரணிக்க உதவுகின்றது.
இது வேலை செய்ய உதவுகின்றது.
விளையாடுவதற்கு உற்சாகத்தைத் தருகின்றது.
இதில் பல வகைகள் உண்டு.

# மலர்கள் என்ன சொல்லும்?



ஆண்டவனின் படைப்பில் நாங்கள் தாம் மிகக் குறுகிய வாழ்க்கையைக் கொண்டவர்கள். அந்தக் குறுகிய காலத்தில் நாங்கள் அதிகமான அழகையும், மணத்தையும் பரப்புகிறவர்கள். நாங்கள் இறைவனின் படைப்புக்கள் என்றாலும், இறைவனுக்கே உகந்தவர்கள். ஆகையால் அந்தக் குறுகிய காலத்தில் நாங்கள் இறைவனுக்கு அழகு செய்து முக்தியை அடைகிறோம். அதனால் எங்களுடைய வாழ்க்கை மூன்று நாட்களே. ஆனாலும் முடிவில் நாங்கள் மரணத்தைக் கடந்த பெருவாழ்வை அடைகிறோம் என்று அறநூல்கள் சொல்கின்றன.



எங்களால் அர்ச்சிக்கப்படும் போது இறைவன் அகமகிழ்கிறான். மனிதர்களும் எங்களால் அடையும் நன்மைகள் ஏராளம். அழகும் நறுமணமும் கொண்ட நாம் மனிதனுக்கு நல்ல மனத் தெளிவையும், உள்ளத்துக்கு உற்சாகத்தையும், உடலுக்கு உறுதியையும் தருகின்றோம். இன்னும் தியானம், ஆன்மீகம், இறைபக்தி போன்றவைகளும் எங்களால் ஏற்படுகின்றன. அன்பு, இரக்கம் உணர்ச்சிகள் கூட எங்களால் கிடைக்கின்றன என்கிறார்கள் சிலர்.

பலவிதமான வண்ண நிறங்களையும், வாசனையையும், கவர்ந்திழுக்கும் ஒளியையும் கண்டு மனிதர்கள் மனச் சந்தோஷத்தைப் பெறுகிறார்கள். இவ்வளவு பெருமைகளைக் கொண்ட எங்களில் தான் எத்தனை வகைகள்! வில்வம், பன்னீர், மந்தாரம், கொன்றை போன்று மரங்களில் உண்டாகும் கோட்டுப்பூக்கள், செம்பருத்தி, துளசி, செவ்வந்தி, அலரி, முல்லை, நந்தியாவட்டம் போன்ற நிலப்பூக்கள், மல்லிகை, முல்லை, சம்பங்கி, ஜாதிப்பூம் போன்ற கொடிப்பூக்கள், தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர், அல்லி போன்ற நீர்ப்பூக்கள், இன்னும் தெரியாத பெயர்கள் எத்தனை! எத்தனை!

இறைவனுக்காகவும், மனிதர்களுக்காகவும் நாம் எவ்வளவு தியாகத்தைச் செய்கிறோம். திருப்புகழைத் தந்த அருணகிரிநாதர் எம்மைப் பற்றிக் கூறும்போது,

"மா மலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே"

என்கிறார். நல்ல சௌகரியங்களுடன் வாழ்பவர்களைப் பார்த்து "நல்ல பூவெடுத்துப் பூஜை செய்தவர்" என்று உலகத்தவர் கூறுவார்கள்.

ஆக்கம். முகுந்தன் மகேந்திரன்

# மறக்காதே!



பிறரை நீயும் மதித்தாலே
பிறரும் உன்னை மதித்திடுவார்!
குறையை நீயும் கழித்தாலே
குணமும் உன்னுள் பெருகிவிடும்!

மதிப்பைப் பெறுவது வாழ்க்கையிலே
வளர்ச்சி யடையும் வழியாகும்!
மதிப்பைத் தருவதோ வாழ்க்கைக்கே
மாண்பு தரும் ஒரு செயலாகும்!


மதிக்கத் தெரிந்த இருவருக்கு
மனமும் இருண்டே இருக்காது!
பதிக்க வேண்டும் கருத்திதனைப்
பயனாய்ப் போற்ற மறக்காதே!

— மதிஒளி —

*Nektar für die Kinder*

*Nectar pour les enfants*

*Nectar for the childrens*



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527